**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**முன்னிலை:- திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், மாசி மாதம் 29-ம் நாள்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை

**இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.207/2023**

**(CNR NO.TNTV14-001194-2023)**

பிரவீன்ராஜ்
(IA No.3/2023-ல் கடந்த 14.12.2023 தேதிய
உத்தரவுபடி திருத்தப்பட்டது. ) ...... மனுதாரர்

எதிராக

மேலாண் இயக்குநர் ,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
கும்பகோணம். .......எதிர்மனுதாரர்

இந்த மனுவானது கடந்த 07.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கண்ணன், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.உதயகுமார், பி.எஸ்ஸி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று (13.03.2026) வழங்கும்.....

## உத்தரவு

கடந்த 01.08.2018–ம் தேதி இரவு சுமார் 9.15 மணியளவில் கரும்பியூர், கோடி விநாயகநல்லூர் வாய்க்கால் அருகே நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.5,00,000/– பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் எதிர்மனுதாரரிடமிருந்து கிடைக்க கோரி மோட்டார் வாகன சட்டப்பிரிவுகள் 140 மற்றும் 166–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்** :–

விபத்தில் காயம்பட்ட மனுதாரரான பிரவீன்ராஜ் என்பவர் 17 வயதுடையவர் என்றும், விபத்து சமயத்தில் பள்ளி மாணவன் என்றும், கடந்த 01.08.2018 தேதி இரவு 9.15 மணிக்கு மனுதாரர் முட்டை வாங்குவதற்கு கடைக்கு செல்ல கோடிவிநாயகநல்லூர் மெயின்ரோடு வாய்க்கால் அருகில் கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையின் இடது புற ஓரமாக நடந்து சென்றுகொண்டிருந்த போது திருத்துறைப்பூண்டியிலிருந்து திருவாரூர் செல்லும் எதிர்மனுதாரருக்கு சொந்தமான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்து TN 49 N 1604 என்ற பதிவு உள்ள பேருந்தை ஓட்டிய அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், தாறுமாறாக ஓட்டி நடந்து சென்ற மனுதாரர் பின்பக்கம் மோதியது என்றும், இந்த விபத்தில் மனுதாரருக்கு வலதுகால், இடதுகால் முட்டியிலும், இடது முன் தலை நெற்றியில், இடது கண்புருவம் ஆகிய இடங்களில் பலத்த அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டது என்றும், உடலெங்கும் அடிபட்டு உள்காயம் ஏற்பட்டது

என்றும், காயமடைந்த மனுதாரரை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 01/08/2018ம் தேதி சேர்த்தும் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்து 15.08.2018ம் தேதி வரை உள்நோயாளியாக தீவிர சிகிச்சை பெற்றார் என்றும், மனுதாரர் அதன்பிறகு தனியார் மருத்துவரிடம் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

3) மனுதாரருக்கு இடது கால், வலதுகால் முட்டியிலும் அடிபட்டு கமும், இடது பக்க நெற்றி கண்புருவம் ஆகிய இடங்களில் எலும்புமுறிவு கொடுங்காயம் ஏற்பட்டதால் மனுதாரர் தொடர்ந்து சிகிச்சை பெற்றும் வருகிறார் என்றும், மனுதாரருக்கு காலிலும், தலையிலும், கண்ணிலும் வலியும், உபாதையும் ஏற்படுகிறது என்றும், இதனால் மனுதாரரால் அன்றாட தனது வேலைகளை செய்ய முடியாமல் மிகுந்த கஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரருக்கு ஏற்பட்ட வலி, துன்பம், நிரந்தர இயலாமை, மருத்துவசெலவு பொருளீட்டும் திறன் இழப்பு ஆகியவற்றிற்காகவும் நஷ்ட ஈட்டு தொகையாக ரூ. 5,00,000/– கோரி இந்த மனு தாக்கல் செய்துள்ளார்.

4) இந்த விபத்து குறித்து எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டியவர் மீது ஆலிவலம் காவல் நிலையத்தினரால் குற்ற எண்.125/2018ல் சட்டப்பிரிவுகள் 279, 337 இதச படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த விபத்து ஏற்படுத்திய வாகனம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதாகும் மேற்படி எதிர்மனுதாரரின் வாகனத்தினை ஓட்டிய

ஓட்டுநரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர் கோரும் இழப்பீட்டுத் தொகையை 12% வட்டி, செலவுத்தொகையுடன் எதிர்மனுதாரர் கொடுக்க சட்டப்படி கடமைப்பட்டுள்ளார் என மனு தாக்கல் செய்துள்ளார்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலை நிற்கக் கூடியதல்ல என்றும், அவற்றை சடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமும், நியாயமுமாக உள்ளது என்றும், இந்த எதிர்மனுதாரர் பேருந்தின் ஓட்டுனர் கனரக வாகனம் ஓட்டுவதில் சிறந்த பயிற்சி பெற்றவரும் முறையான ஓட்டுனர் உரிமம் உடையவரும் ஆவார் என்றும், எதிர்மனுதாரர் ஓட்டுனர் மீது காவல்துறை தரப்பில் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதை மட்டுமே அடிப்படையாக கொண்டு எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கோருவது தவது.

ii) கடந்த 01.08.2018 அன்று இந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான டிஎன் 49 என் 1604 என்ற பதிவென் கொண்ட பேருந்தை அதன் ஓட்டுனர் அன்று இரவு சுமார் 08.45 மணிக்கு திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையத்தில் நடையெடுத்து சீரான வேகத்திலும், நிதானமாகவும், கவனமுடனும், சாலை விதிகளை அனுசரித்தும் திருவாரூர் நோக்கி சென்று கொண்டிருக்கும் போது விபத்து நடந்ததாக கூறப்படும் ஆலத்தம்பாடி பேருந்து நிறுத்ததிற்கு முன்பாக உள்ள கரும்பியூர்

கோடிவிநாயக நல்லூர் வாய்க்கால் அருகில் இந்த எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுனர் பேருந்தை கவனமுடன் இயக்கி கொண்டிருக்கும் போது சாலையின் இடதுபுறத்தில் 17 வயதுடைய சிறுவன் கடையில் முட்டை வாங்குவதற்காக சென்றுகொண்டிருக்கும் போது பேருந்து வருவதை கவனிக்காமலும், அலட்சியமாகவும், விளையாட்டு தனத்துடனும் திடீரென்று சாலையை கடக்க முற்பட்டு இடதுபுறத்திலிருந்து வலதுபுறம் நோக்கி வரும்போது இந்த எதிர்மனுதாரர் பேருந்தில் மோதி கீழே விழுந்து தனக்கு தானே விபத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளார் என்றும், மேலும் இந்த விபத்து பாதசாரியின் அலட்சியம் மற்றும் கவனக்குறைவினால் ஏற்பட்ட விபத்தாகும் பிரதான சாலையில் செல்லும் போதும், சாலையை கடக்கும் போதும் சாலையின் இருபுறம் வாகனங்கள் எதுவும் வருகிறதா என நின்று, நிதானித்து, பின்னர் சாலையை கடந்து இருந்தால் இந்த விபத்து நிகழ்த்திருக்காது.

iii) இது அரசு நிறுவனம் என்பதால் அதிக இழப்பீடு பெறலாம் என்ற அனுமானத்தின் பேரிலும், யாரோ கூறிய அறிவுரையின் பேரிலும், அவர் செய்த தவற்றை முற்றிலும் மறைத்து இந்த எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுனர் மீது பொய்யாக குற்றம் சாட்டப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் இழப்பீடு கோரப்பட்டுள்ளது. எனவே, இந்த விபத்திற்கு பாதசாரியே முழுப்பொறுப்பாவார் என்பதால் இந்த எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுனர் எந்த வகையிலும் பொறுப்பாகமாட்டார் இந்த எதிர்மனுதாரர் நிர்வாகம் நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று கூறி இந்த மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய

வேண்டுமெனவும், மனுதாரர் தனது மனுவில் பக்கம் எண்:4 மற்றும் 5–ல் கீழ் கோரப்பட்டுள்ள இழப்பீடு தொகை யாவும் சரியானவை அல்ல என்றும், இழப்பீடு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மருத்துவமனையில் எந்த தேதி முதல் எந்த தேதி வரை சிகிச்சை மேற்கொண்டதற்கும், மருந்து வாங்கியதற்கும் விபத்து பதிவேடு மற்றும் மருந்துச் சீட்டினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கடமைப்பட்டவராவார்.

iv) மனுதாரருக்கு பேருந்து விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கு முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஏதும் பெறவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ ரசீதுகளில் மனுதாரர் பெயர் இல்லை என்றாலும் மற்றும் Advance தொகை செலுத்திய அந்த ரசீதுகளையும் நீக்கரவு செய்து சரியான ரசீதுகளை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும், எனவே மனுதாரரின் செலவு தொகையுடள் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4. <u>பிரச்சனை</u>:–**

1. இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?

2. மனுதாரர் இழப்பீடு பெற உரிமையுள்ளவர்களா, அவ்வாறெனில் மனுதாரருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கதக்கது?

**5.** மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் பிரவீன்ராஜ் என்பவர் **ம.சா.1**ஆக விசாரிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா.1**ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.1**ஆக கார்த்திகேயன் அரசு பேருந்து ஓட்டுநர் விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**6. <u>பிரச்சினை எண்.1க்கு தீர்வு:–</u>**

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய மேற்படி பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு மனுதாரர் பிரவீன்ராஜ் என்பவர் ம.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழிக்காட்டுதலின்படி மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுவில் விபத்து நடந்த விதம் பற்றி மனுதாரர் குற்றவியல் வழக்கை போல சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய வழக்கின் சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையை (Preponderance of Probabilities) நிரூபணம் செய்தாலே போதுமானதாகும்.

**8. ம.சா.1 தனது சாட்சியத்தில்**

" கடந்த 01.08.2018 தேதி இரவு 9.15 மணிக்கு முட்டை வாங்குவதற்கு நான் கடைக்கு செல்ல கோடி விநாயக நல்லூர்

மெயின்ரோடு வாய்க்கால் அருகில் கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையின் இடது புற ஓரமாக நடந்து சென்றுகொண்டிருந்த போது திருத்துறைப்பூண்டியிலிருந்து திருவாரூர் செல்லும் எதிர்மனுதாரருக்கு சொந்தமான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்து TN 49 N 1604 என்ற பதிவு உள்ள பேருந்தை ஓட்டிய அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், தாறுமாறாக ஓட்டி நடந்து சென்ற என் பின்பக்கம் மோதிவிட்டார். " என சாட்சியம் அளித்துள்ளார்.

9. **ம.சா.ஆ.1**ஆன முதல் தகவல் அறிக்கையில்

" 01.08.16ம் தேதி இரவு சுமார் 09.15 மணி அளவில் நான் முட்டை வாங்க கடைக்கு எங்க வீட்டிலிருந்து புறப்பட்டு, மெயின்ரோட்டில் கோடி வினாயக நல்லூர் வாய்க்கால் அருகில் கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்து சென்றபோது திருத்துறைப்பூண்டியிலிருந்து திருவாரூர் நோக்கி வந்த அரசு பஸ் TN 49 N 1604 என்ற பேருந்து அதிவேகமாகவும், ஆரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும் வந்து என் பின்னால் மோதிவிட்டார்."

என கண்டு எழுதப்பட்டுள்ளதையும் இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டது. ஆனால் மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.1**ஆனவர் சாட்சியம் அளித்திருந்ததையும் இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலித்தது.

**எ.ம.சா.1** தன்னுடைய சாட்சியத்தில்

" கடந்த 01.08.2018 அன்று இந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான டிஎன்–49–என்–1604 என்ற பதிவெண் கொண்ட பேருந்தின் ஓட்டுனராகிய நான் இரவு சுமார் 08.45 மணிக்கு திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையத்திலிருந்து நடையெடுத்து சாலை விதிகளை அனுசரித்தும், சீரான வேகத்திலும், நிதானமாகவும், கவனமுடனும் திருவாரூர் நோக்கி சென்று கொண்டிருக்கும் போது விபத்து நடந்ததாக கூறப்படும் ஆலத்தம்பாடி பேருந்து நிறுத்திற்கு முன்பாக உள்ள கரும்பியூர் கோடிவிநாயநல்லூர் வாய்க்கால் அருகில் இந்த எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுனராகிய நான் பேருந்தை கவனமுடன் இயக்கி கொண்டிருக்கும் போது சாலையின் இடதுபுறத்தில் 17 வயதுடைய சிறுவன் கடையில் முட்டை வாங்குவதற்காக சென்றுகொண்டிருக்கும் போது பேருந்து வருவதை கவனிக்காமலும், அலட்சியமாகவும் விளையாட்டு தனத்துடனும் திடீரென்று சாலையை கடக்க முற்பட்டு இடதுபுறத்திலிருந்து வலதுபுறம் நோக்கி வரும்போது இந்த எதிர்மனுதாரர் பேருந்தில் மோதி கீழே விழுந்து தனக்கு தானே விபத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்பதால் எதிர்மனுதாரரான நான் பணிபுரிந்து வந்த அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் மண்டலம் எந்த வகையிலும் நஷ்டாடு வழங்க கடமைப்பட்டவர் அல்லர் " என அளித்துள்ள சாட்சியத்தையும் இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலித்தது.

அது குறித்து நிரூபிக்கும் பொருட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியம் ம.சா.ஆ.1ஆன முதல் தகவல் அறிக்கை மற்றும் நீ.ம.சா.ஆ.1ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த வழக்கில் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டது என்பதும், விபத்திற்கு எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் அலட்சியம் காரணம் என்பதால் மனுதாரருக்கு, எதிர்மனுதாரரான அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் மண்டலம் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் ஆவார் என இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து 1வது பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

10. <u>பிரச்சனை எண்.2க்கு தீர்வு</u>:–

இந்த மனுவில் மனுதாரர் பிரவீன்ராஜ் என்பவர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு வலதுகால், இடதுகால் முட்டியிலும், இடது முன் தலை நெற்றியில், இடது கண்புருவம் ஆகிய இடங்களில் பலத்த அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டது என்றும், உடலெங்கும் அடிபட்டு உள்காயம் ஏற்பட்டது என்றும், காயமடைந்த மனுதாரரை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 01/08/2018ம் தேதி சேர்த்தும் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்து 15.08.2018ம் தேதி வரை உள்நோயாளியாக தீவிர சிகிச்சை பெற்றார் என்றும், மனுதாரர் அதன்பிறகு தனியார் மருத்துவரிடம் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார் என்பது தெரிய வருகிறது.

மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் அளவை கணக்கிட மருத்துவ போர்டுக்கு அனுப்பப்பட்டார். அவரை பரிசோதித்த குழுமம் வழங்கிய அறிக்கையில் மனுதாரருக்கு 0% (No locomotor disability) ஊனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் ஊனத்திற்கான இழப்பீடு எதுவும் மனுதாரருக்கு கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மனுதாருக்கு வலி, வேதனை இருந்திருக்கும் எனவே வலி, வேதனை என்ற தலைப்பின் கீழ் அவருக்கு ரூ.15,000/-ம் வழங்கிட இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. விபத்து சமயத்தில் மனுதாரர் பள்ளி மாணவன் என குறிபிடப்பட்டுள்ளதால் மாண்புமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கான **The Managing Director Vs. Minor S.Surya on 22 September, 2016** என்ற வழக்கில் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பின் பத்தி 8-ல் குறிபிடப்பட்டுள்ளவாறு

" By observing that due to amputation, there is certainly a functional disability and following the decision in V.Mekala's case, the Tribunal has fixed the notional income at Rs.6,000/- per month. Though PW.2, Doctor, has assessed the extent of disablement at 85%, the Tribunal has reduced the same to 75%. No reasons have been assigned, by the Tribunal, for reduction. In V.Mekala's case, the injured girl was aged about 16 years, stated to be a brilliant student of Class XI, holding first rank in her school, suffered 70% permanent disablement and unable to walk, without crutches and thus, become permanent disabled. The Hon'ble Apex Court, fixed the notional income at Rs.6,000/- and added 50% towards future prospects. Whereas, in the instant case, the minor injured was aged 14 years and suffered 75% permanent disablement, and that the Tribunal has fixed the notional income as Rs.6,000/- per month.” என 2015-ல் நடந்த விபத்திற்கு மாத வருமானம் ரூ.6000 என மேற்கண்ட முன்தீர்ப்புகளின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில்

தீர்வுக்குரிய இந்த மனுவில் கண்ட மனுதாரரான பிரவீன்ராஜ் என்பவருக்கு மாத வருமானமாக ரூ.7,000/- என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து கணக்கில் எடுத்துக்கொள்கிறது. மனுதாரர் 3 மாதம் ஓய்வில் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பீட்டிற்காக (மாத வருமானம் 7000x 3மாதம்) ரூ.21,000/-மும், ஊட்டச்சத்து உட்கொண்ட வகையில் அவருக்கு ரூ.10,000/-ம், உதவியாளர் செலவிற்காக ரூ.10,000/-ம், போக்குவரத்து செலவிற்காக ரூ.5,000/-ம், வாழ்க்கை வசதி இழப்பீட்டிற்காக ரூ.5,000/-ம் வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

**12.** மனுதாரர் பிரவீன்ராஜ் என்பவருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீட்டுத் தொகை கிடைக்கதக்கதாகும்.

| | |
|---|---|
| வலி வேதனைக்கு | ரூ.15,000/- |
| வருமான இழப்பீடுக்கு (7000x3) | ரூ.21,000/- |
| ஊட்டச்சத்து உணவு | ரூ.10,000/- |
| உதவியாளர் செலவு | ரூ.10,000/- |
| போக்குவரத்து செலவு | ரூ.5,000/- |
| வாழ்க்கை வசதி இழப்பீடு | ரூ.5,000/- |
| மொத்தம் | ரூ.66,000/- |

**13.** இந்த மனுவில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மொத்தம் ரூ.66,000/- சரியான தகுந்த இழப்பீடு என முடிவு செய்து அதற்கு மனு தேதியிலிருந்து தொகை வசூலாகும் வரை தவறுகையினால் தள்ளுபடியாக காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக மீதி காலத்திற்கு 7.5% வட்டியுடன் சேர்த்து வழங்கி உத்தரவிட முடிவு செய்யப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையானது நியாயமான தகுந்த இழப்பீட்டுத் தொகை எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரருக்கான மேற்படி இழப்பீட்டு தொகையினை அவருக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் The Divisional Manager, The Oriental Insurance Company Ltd., Kannur Vs. Rajesh & Others என்ற வழக்கில் 2016(1) TN MAC 433-ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பில் கண்ட வழிமுறைகளின்படி செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பிரச்சனை எண்.3க்கு தீர்வு காணப்படுகிறது.

**14.** இறுதியாக, மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டும், ரூ.66,000/-ஐ எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடாக மனு தாக்கல் நாள் (29.04.2019) முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டு தொகையை எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற திருத்துறைப்பூண்டி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்.000000 42903368477 (IFSC Code SBIN0000936)

கணக்கில் பணத்தை வைப்பீடு செய்ய வேண்டும். மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர் தன்னுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மனுதாரரின் காயத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், விபத்தானது 2018–ல் ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம் என்றும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.2,875/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழ மண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கின்றது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் வாய்மொழியாக சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்படடு பின் என்னால் சரிப்பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.27 19:06:02 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.

**<u>செலவுத் தொகை பட்டியல்</u>**

| **மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல்** | **தொகை** | |
|---|---|---|
| | **ரூ.** | **பை.** |
| நீதிமன்ற கட்டணம் | 372 | 50 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| நீதிமன்ற ஆவண கட்டணம் | 20 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 2875 | 00 |
| சம்மன்படி | 4 | 50 |
| தட்டச்சு கூலி | 100 | 00 |
| மொத்தம் | 3382 | 00 |

(இம்மனுவின் செலவுத் தொகையான ரூ.3,382/-ஐ எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

1. **<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>:-**

ம.சா.1 பிரவீன்ராஜ் (மனுதாரர்)

2. **<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:-**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 02.08.2018 | முதல் தகவல் அறிக்கை – உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 15.08.2018 | டிஸ்சார்ஜ் சம்மரி – அசல் |
| ம.சா.ஆ.3 | 28.11.2006 | எதிர்மனுதாரர் வாகனத்தின் ஆர்.சி.புக் – நகல் |
| ம.சா.ஆ.4 | 04.01.1993 | எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் உரிமம் – நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | 17.08.2018 | மனுதாரர் மருத்துவ சிகிச்சை பெற்ற டிஸ்சார்ஜ் சம்மரி – நகல் |

3. **<u>நீதிமன்ற சான்றாவணம்</u>**:–

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 21.10.2024 | திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் |

4. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.1 | கார்த்திகேயன் | அரசு பேருந்து ஓட்டுநர் |

5. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** :– இல்லை

M
RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.27 19:06:08 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.